## (ஊ) நடைமுறை மாதிரி அளவைகள்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம், 1973இல் நுகர்வோர் நிதிகளின் மூன்ருவது அளவையை நடாத்தியது. உடவளவை செயற்றிட்டத்தில் தொழில் நுட்பப் பொருளாதார அளவை நடாத்தப்பட்டபோதும், வெளிக்கள வேலை 1974லேயே நிறைவேற்றப்படும். மகாவலி அபிவிருத்தி எல்லைப்பரப்பின் தற்போதைய பொருளாதார நிலைமைபற்றிய அளவைக்கான தொடக்கப் பணி இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டது.

### 1. 1973ஆம் ஆண்டின் நுகர்வோர் நிதிகள் / அளவை.

1953ஆம் ஆண்டிலும் 1963ஆம் ஆண்டிலும் மத்திய வங்கியானது நுகர்வோர் நிதிகள் பற்றிய இரண்டு அளவைகளை நடாத்தியது. 1973இன் முதல் இரண்டு மாதக் காலப்பகுதியில் மூன்ரும் அளவையின் வெளிக்கள ஆய்வு முடிக்கப்பட்டது.

1973ஆம் ஆண்டில் நடந்த அளவையின் முக்கிய நோக்கம் குடியிருப்பாளரது வருமானமும் செலவும் பற்றிய தரவுகளைச் சேகரித்தலாகும். இவற்றுடன், தொடர்பான குடிநிலைப் புள்ளிவிபரங்களும் வேலை நிலைபற்றிய தரவுகளும் சேகரிக்கப்பட்டன. இந்த அளவையின் முடிவுகள் 1974ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. செய்யப்படவிருக்கும் வருமான மாற்றத்தின் சுருக்கப் பகுப்பாய்விற்கு துணைநிற்கும் முறையில் வருமானத் தரவுகளின் ஒரு பகுதி அட்டவணைப்படுத்தப்பட்டு தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ளது.

5,088 குடியிருப்புகளின் 28,587 தனியாட்களை மாதிரி அளவை உள்ளடக்கியுள்ளது. இவர்களில் 7,326 பேர்கள் வருமானம் பெறுபவர்களாவர். இவ்வளவையின் தேவைக்காக, அளவை நடைபெறுவதற்கு உடன் முந்திய ஆறுமாதக் காலங்களில் பண வருவாய் அல்லது பொருள் வருவாயைப் பெறுபவரே வருமானம் பெறுபவர் என்று வரையறை செய்யப்பட்டது. ஆறுமாத காலப்பகுதிக்கான வருமானத் தரவுகளைப் பெறுவதோடு, இவ்வளவைக்கு உடன் முந்திய இருமாதங்களுக்கான வருமானத்தரவுகளும், இவ்வளவையிற் சேகரிக்கப்பட்டுள்ளது. இறுதியாகக் கிடைக்கப்பெற்ற தரவு அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை II (ஊ)

## இரு மாதங்களுக்கான வருமானத்தின் மாதிரிப் பங்கீடு

| இரு மாதங்களுக்குரிய வருமானம் (ரூ.) | வருமானம் பெறுவோர் | |
|---|---|---|
| | எண் | % |
| 0 — 100 | 536 | 7.3 |
| 101 — 200 | 1388 | 18.9 |
| 201 — 300 | 1152 | 15.7 |
| 301 — 000 | 1041 | 13.7 |
| 401 — 500 | 886 | 12.2 |
| 501 — 600 | 689 | 9.4 |
| 601 — 700 | 481 | 6.6 |
| 701 — 800 | 357 | 4.9 |
| 801 — 900 | 223 | 3.0 |
| 901 — 1000 | 141 | 1.9 |
| 1001 — 1200 | 195 | 2.7 |
| 1201 — 1400 | 96 | 1.3 |
| 1401 — 1600 | 44 | 0.6 |
| 1601 — 1800 | 31 | 0.4 |
| 1801 -- 2000 | 23 | 0.3 |
| 2001 2500 | 35 | 0.5 |
| 2501 — 3000 | 15 | 0.2 |
| 3000க்கு மேல | 30 | 0.4 |
| | 7326 | 100.0 |

அட்டவணையில் 1973இல் வருமானம் பெறும் ஒருவரின் சராசரி மாதாந்த வருமானம் 1973இல் ரூபா 228ஆக விளங்கியது. ஒப்புநோக்குகையில் இவ்வருமானம் 1963இல் நுகர்வோர் நிதி மதிப்பீட்டளவையின்படி ரூ. 134ஆகவிளங்கியது. ஆயினும் 1963இன் நிலையான விலைகளுக்கேற்ப, கொழும்பு நுகர்வோர் விலைக்குறி காட்டியினுல் சுருக்கப்படின், 1973ஆம் ஆண்டில் மாதாந்த சராசரி வருமானம் ரூ. 150 ஆக விளங்கும். வேறு சொற்களில் விளம்பின் இறுதி இரண்டு நுகர்வோர் நிதியளவிற் காட்டப்பட்டவாறு, உண்மையான சராசரி வருமானம் ஆண்டொன்றிற்கு 1.2 சதவீதமாக அதிகரித்துள்ளது தெரிய வருகிறது. விலைகளின் அதிகரிப்பைப் போதுமானளவு பிரதிபலிக்கும் முறையில் விலைக்குறிகாட்டி விளங்காததினுல் இக்கூற்று நிறைவுடையதாக அமைய மாட்டாது. அத்துடன் இந்த அளவை, வருமானத்தின் அதிகரிப்பு சமமான முறையில் அமையவில்லை என்பதையும் எடுத்துக்காட்டுகிறது நகரத்துறையின் உண்மையான சராசரி வருமானம் ஆண்டுக்கு 1.8 சதவீதம் என்ற வீதத்தில் வீழ்ச்சியடைய கிராமிய பெருந்தோட்டப் பகுதிகள் தனித்தனியே 2 சதவீதம் என்ற அடிப்படையில் அதிகரித்துள்ளன.

வருமானத்தரவும்கூட வருமானப் பங்கீடு கணிசமானளவு மாற்றமுற்றிருப்பதைக் காட்டுகிறது. இது அதிகளவு சமத்துவத்தை தோற்றுவிக்கும் போக்கையே காட்டுகிறது. வருமானச் சமமின்மையினை நன்முறையில் எடுத்துக்

காட்டும் கினியின் குணகம் (ginies co-efficient) 1963-73 கொண்ட பத்தாண்டு காலப்பகுதியில் 0·49 லிருந்து 0.41க்கு மாற்றமுற்றுள்ளது. முந்திய 10 ஆண்டு காலப்பகுதியில் இக் குணகம் மாற்றமுற்றதென்று கூறமுடியாதபடி நிலையாக நின்றது. ''கினியினது குணகம்'' பூச்சியத்திற்கும் ஒன்றிற்கும் இடைப்பட்ட ஒரு எண்ணுகவிருக்கும். (இச்சுட்டெண் பூச்சியத்திற்கு அண்மையான ஒரு எண்ணுக அண்மையின் அது வருமானப் பங்கீட்டில் பெருமளவு சமத்துவ நிலையைக்குறிக்கும்.) குறைந்த வருமானம் பெறுவோர் சார்பாக கூலியமைப்பை மாற்றியதோடு முன்பு கவனிக்கப்படாதிருந்த கிராமியத்துறை பரந்தளவில் அபிவிருத்தி அடையச்செய்யும் முறையில் அரசாங்க கொள்கைகள் அமைந் திருந்ததே, வருமான மட்டம் உயர்வுற்றதற்குக் காரணமாயிருந்தது என்று கூறலாம். நகரம், கிராமம், தோட்டத்துறை ஆகிய அனைத்தையும் உள்ளடக்கி நாட்டின் நிலை முழுவதையும் 1963இலும் 1973இலும் நடாத்திய இடைப்பட்ட நுகர்வோர் அளவைத் தரவுகளைக் கினியின் குணகம் வாயிலாகக்கணிப்பின் அவை பின்வரும் முறையில் அமையும்.

**கினியின் குணகம்**

| | 1963 | 1973 |
|---|---|---|
| முழு நாட்டிற்கு | .49 | .41 |
| நகரம் | .49 | .40 |
| கிராமியம் | .44 | .37 |
| பெருந்தோட்டம் | .27 | 37 |

நகரத்துறை, கிராமியத்துறை. ஆகிய இரண்டு துறைகளினதும் குறிகாட்டி யானது, வருமானம் பங்கீடு கணிசமானளவு மாற்றமுற்றிருப்பதைக் காட்டு கிறது. பெருந் தோட்டத்துறையைப் பொறுத்தவரை, இரு அளவைகளுக்கும் பயன்படுத்தப்பட்ட மாதிரித்திட்டம் வேறுபாடு உடையதாய் இருப்பதினுல் கையாளப்படும் இரு எண் தொகைகளும் முற்ருக ஒப்பிடத்தக்க முறையில் அமையவில்லை. 1963ஆம் ஆண்டில் நடைபெற்ற அளவையில் முகாமை மட்டத்திலுள்ள பெருந்தோட்ட அலுவலர்கள் போதியளவு உள்ளடக்கப்பட வில்லை. ஆனுல், 1973இல் நடைபெற்ற அளவையில் அவர்கள் போதியமுறை யில் உள்ளடக்கப்பட்டனர். குறிகாட்டியில் ஏற்பட்ட .27 இலிருந்து ·37 இற்கான அதிகரிப்பிற்கு இவ்வேறுபாடே காரணமாயிருக்கலாம்.

வருமானப்பங்கீட்டு மாற்றத்தில் மொத்த வருமானத்தின் பங்கில் சதவீத வீழ்ச்சியினுற் பாதிக்கப்பட்ட வருமானத்தொகுதியாளர் ஆகக்கூடிய வரு மானத்தைப் பெறும் 10 சதவீதத்தினரேயாவர். 1963இல் வருமானப்பங்கில் 40 சதவீதத்தை அனுபவித்த இவர்கள் இப்பொழுது 30 சதவீதம் கொண்ட குறைக்கப்பட்ட வருவாய்ப்பங்கினை மட்டுமே அனுபவிக்கின்றனர்,

**2. உடவளாவைச்செயற்றிட்டம் எல்லைப்பரப்பின் தொழில்நுட்ப பொருளாதார அளவை**

கிடைக்கத்தக்க மனித-பௌதீக மூலவளங்கள் கொண்டு பொருளாதார வாய்ப்பை ஆராய்தலே இவ்வளவையின் நோக்கமாகும். அத்துடன் செயற்றிட்டத்தில் முதலீடு செய்வதனுல் ஏற்படக்கூடிய தாக்கத்தை ஆராய்வதோடு பண்ணை முறைப் பொருளாதாரத்துடன் ஒட்டிய பிரச்சினைகளையும் வேளாண்மை அடிப்படையிலான கைத்தொழில்களில் எதிர்பார்க்கப்படும் வளர்ச்சியையும் ஆராய்தலும் இவ்வளவையின் நோக்கமாகும்.

ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை செய்த செலவுகளைப்பற்றிய தரவுகளைச் சேகரிப்பதுடன், முக்கிய பயிர்களை உற்பத்தி செய்தல், வேலை வாய்ப்பு, கமக்காரர்களின் வருமானம் செலவு, கல்வி, நலத்துறை வசதிகள், கைத்தொழில் வாய்ப்புகள் ஆகியவை பற்றியும் தரவுகளையும் இவ்வளவை சேகரிக்கும். விவசாயிகளிடமிருந்து தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஓராண்டுக் காலப்பிரிவில் ஒவ்வொரு கிழமையும் பயிற்சிபெற்ற ஆய்வாளர், மாதிரிக்குத்தெரிந்தெடுத்த சில விவசாயிகளின் இல்லங்களுக்குச் செல்வர்.

அளவையின் வெளிக்களவேலை, 1973, ஒற்றோபரிற் தொடங்கி ஒரு ஆண்டு முடிவில் நிறைவுபெறும்.

**3 மகாவலி அபிவிருத்தி எல்லைப்பரப்பின் வளர்ச்சி பற்றிய தொடக்க அளவை.**

இவ்வளவையானது திருப்பிவிடப்பட்ட நீரைப்பயன்படுத்துவதற்கு முன்னர் மகாவலி அபிவிருத்தி எல்லைப்பரப்பில் நிலவிய பொருளாதார சமுதாய நிலையை பல குறிகாட்டிகள் வாயிலாகப் பதிவுசெய்ய முயல்கின்றது. இத்தகைய பதிவு, நீர்ப்பாய்ச்சல் வசதிசெய்தபின் அப்பகுதியில் நிலவும் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு ஒரு அளவுகோலாய் அமையும்.

இவ்வளவை, குடிநிலைப்புள்ளி விபரங்கள், கல்வி, வேலை வாய்ப்பு, வீடமைப்பு, பல்வேறு பணி நிலையங்கள், போக்குவரத்து வசதிகள், காணி பயன்படுத்தப்படும்முறை, பயிர்ச்செய்கை முறைகள், நீர்ப்பாசன நிலை, ஒழுங்கான பயிர்ச்செய்கையிலும் சேனைப்பயிர்ச்செய்கையிலும் தோட்டப் பயிர்ச் செய்கையிலும், கிடைக்கும் வருவாய், கிராமங்களை வழிநடத்தும் தலைவர்கள் பற்றியும் தரவினைச் சேகரிக்கும்.

15 கிராமங்களும் 5 குடியேற்றத் திட்டங்களும் இம்மாதிரி அளவைக்குத் தெரிவு செய்யப்பட்டன.

அளவையின் வெளிக்களவேலை 1974 மாச்சில் தொடங்கி இருமாதங்களுக்குள் முடிவுறும்.